

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (5.8.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட ”கலைஞர் கலைஞர் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணைத் தலைவர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், உறுப்பினர் செயலர் முதலமைச்சரின் செயலாளர்3 முனைவர் ம.சு.சண்முகம், குழு உறுப்பினர்கள் திரைப்பட நடிகர் நாசர், திருமதி விஜயா தாயன்பன், கவிஞர் பா. விஜய், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ரா. முரளி, தமிழ் ஸ்டுடியோ நிறுவனர் அருண்மோ ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ள இடத்தையும், அங்கு நடைபெற்று வரும் மேடை அமைக்கும் பணியையும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், ஐ.பெரியசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., மற்றும் கழக முன்னோடிகள் அப்போது உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் உள்ள பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தில், மேம்பாட்டு பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (05.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

# மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

## நிதி - மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

தஞ்சாவூர் ஆக.6-

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்ிணங்க சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின் போது உலகாண்ட சோழர்களின் பங்களிப்பை போற்றவும் அக்கால கலைப் பொருட்கள் நினைவுச் சின்னங்களை பாதுகாக்கவும் தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம் அமைப்பதற்காக தஞ்சாவூர் பெரியகோயில் அருகேயுள்ள மேம்பாலம் அருகில் உள்ள இடத்தை மாவட்ட ஆட்சியர் ஏற்கெனவே தேர்வு செய்து, துறைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்களிடம் காண்பித்துள்ளார். இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது என துறைச் செயலர் கூறியதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாநகரில் இவ்வளவு பெரிய இடம் கிடைத்திருப்பது அரிய வாய்ப்பாக இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணம் வீண் போகாத வகையில் சிறந்த அருங்காட்சியகத்துக்கு இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது.

தஞ்சாவூரில் சோழர்களின் பெருமையை பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்க முதல்வர் உத்தரவிட்டார். இந்திய வரலாற்றில் சோழர்களின் காலம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கடல் கடந்த வாணிபமும், போர்வெற்றியும் அவர்களின் ஆட்சிமுறையும் இந்தியாவில் இருந்த எத்தனையோ அரசாட்சிகள் நடந்திருந்தாலும், முதன்மையாக சோழர்களின் காலம் விளங்கியது. தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டிய மாமன்னன் இராசராச சோழன், கங்கைகொண்ட சோழபுரம் கட்டிய ராஜேந்திர சோழன் என பிற்காலச் சோழர்களின் பங்களிப்பு தமிழகத்தில் நிலை நாட்டிய பெருமை உண்டு. சோழர்களின் போர் வெற்றி,

கோவில் பணிகள்,சமுதாயப் பணிகள்,கலைத்திறன் என எல்லாவற்றையும் விளக்கக் கூடிய வகையில் அருங்காட்சியகம் அமைய உள்ளது.ஏற்கனவே 1000 ஆண்டு விழாவின்போது சோழர்களின் பெருமையை விளக்கும் விதமாக மிகப் பெரிய கண்காட்சி நடத்தப்பட்டது.

அது ஒரு குறிப்பிட்ட காலம் தான் நடைபெற்றது. தற்போது நிரந்தரமாக இந்த அருங்காட்சியகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைய உள்ளது. தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் பெரிய கோவில் அருகே அமைந்துள்ளதால் மிகவும் சிறப்பாக உள்ளது. பெரிய கோவிலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு எளிதாக அருங்காட்சியத்திற்கு வந்து பார்ப்பதற்கு சிறந்த இடமாக அமைந்துள்ளது. விரைவில் முதல்வரின் ஒப்புதலின் பேரில் கட்டுமான பணிகள் துவங்கப்படும். என்றும் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை

அமைச்சர் தங்கம். தென்னரசு தெரிவித்தார்.

ஆய்வின் போது தமிழ்நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண். ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவண குமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியம் காப்பாட்சியர், சி.சிவ குமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதிப் பேரணி!

# திருவல்லிக்கேணி பகுதிக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## பகுதிச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் அறிக்கை!

சென்னை, ஆக.6-

திருவல்லிக்கேணி பகுதி நிர்வகிகளுக்கு பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், எம்.சி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

நாளை (7.8.2023) காலை 7.00 மணி அளவில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில், கழக இளைஞரணி செயலாளர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி அமைதிப்பேரணி, அண்ணா சாலையில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இதில் கழகப் பொதுச் செயலாளர், துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர். பாலு, எம்.பி., தயாநிதி மாறன், எம்.பி., நே.சிற்றரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

திருவல்லிக்கேணி பகுதி மாநில, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர், வட்ட செயலாளர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் கழக செயல் வீரர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்..

இவ்வாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

